# அச்சுவேலியில் பொம்மர், ஹெலி தாக்குதல்


விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆனி 29 துல்ஹஜ்ஜா 16 இதழ் 142

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13-7-1987


## மத்தியமகாவித்தியாலயமும், தென்னிந்திய திருச்சபையும் பலத்த சேதம்

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலிப்பகுதியைநேற்று மாலை மூன்று மணியளவில் சுற்றிவட்டமிட்டுக்கொண்டிருந்த பொம்மர் விமானம் ஒன்று இப்பகுதியில் திடீரென குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதில் அச்சுவேலி மகா வித்தியாலய கட்டிடங்கள், தென்னிந்திய திருச்சபை கட்டடம் என்பன பலத்தசேதமடைந்துள்ளதுடன் பாடசாலை வளவில் நின்ற மாமரம் ஒன்றும் உருக்குலைந்து முற்றாக கருகியுள்ளது.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின்மீது நேற்று நடத்தப்பட்ட விமானத்தாக்குதல் குறித்து இப்பாடசாலை அதிபர் வடமாநிலக் கல்விப்பணிப்

(5ம் பக்கம் பார்க்க)

## முல்லை மாவட்டத்தில் படையினர் தேடுதல்வேட்டை 48 மணித்தியால ஊரடங்கு

யாழ்ப்பாணம், திங் முல்லைமாவட்டத்தில்நேற்று இராணுவத்தினரின் தேடுதல் வேட்டை ஆரம்பமாகியுள்ளதென அறிவிக்கப்படுகிறது.

நேற்றுஅதிகாலைமுதல் ஹெலி கொப்டர்களில்பெருந்தொகையான இராணுவத்தினர் புதுக்குடியிருப்பிலும் அதனை அண்

(5ம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியில் அரசபடைகள் மீண்டும் "ஒபரேஷன் லிபரேசன்"

# இழந்த பகுதிகளை மீட்பதற்கு புலிகளுடன் உக்கிர மோதல்!

### பல பொதுமக்கள் பலி, வீடுகள், கல்லூரிகள் பலத்த சேதம்

(அலுவலக நிருபர்)

**வடமராட்சிப்பகுதியை மே 26ல் ஆரம்பித்த 'ஒபரேஷன் லிபரேஷன்' மூலம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த அரச படையினர், விடுதலைப்புலிகள் நெல்லியடி இராணுவமுகாம் மீது மேற்கொண்டதாக்குதலால் பல பகுதிகளில் கட்டுப்பாட்டை இழந்ததையடுத்து மீண்டும் அப்பகுதிகளை மீட்க, நேற்று மற்றொரு 'ஒபரேஷன் லிபரேஷன்' ஆரம்பித்தனர். விடுதலைப்புலிகளும் இராணுவத்தை எதிர்த்துகடும் தாக்குதல் நடத்திவருகின்றனர்.**

நேற்றுக்காலை 6-00 மணிமுதல் இன்றுகாலை 6-00 மணிவரை ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கையில் பலர் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்துமுள்ளனர். பலவீடுகள், வாகனங்கள் சேதமாக்கப்பட்டன.

நேற்றைய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட முன்னர் இராணுவ முகாங்களிலிருந்து ஷெல், பீரங்கிதாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாலு ஹெலிகொப்டர்கள் வானத்தில் பறந்து பரவலாக 50 கலிபர் தாக்குதல்களையும், மோட்டார் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்டன.

(2-ம் பக்கம் பார்க்க)

## கனடா நோக்கி தமிழ் அகதிகள் படகொன்று செல்கின்றது

### பிரிட்டன் சுயாதீன தொலைக்காட்சி தகவல்

லண்டன், ஜூலை-12 கனடாவின் துறைமுக நகர் ஒன்றைநோக்கி இலங்கைத் தமிழ் அகதிகள் படகொன்று சென்றுகொண்டிருப்பதாகப் பிரிட்டன் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் அறிவித்துள்ளது. இதனையடுத்து கனேடிய கடற்படைக் கப்பல்கள் இக்

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கண்ணிவெடிக்கு ஆறு இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம். திங்கள். தொண்டமனாறு இராணுவ முகாமிலிருந்து வளலாய் முகாமிற்கு சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் இறந்துள்ளதுடன் பலர்காயமடைந்துள்ளனர். இராணுவ வாகனமொன்று சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் நேற்றுக் காலை

[5ம் பக்கம் பார்க்க]

## "முஸ்லிம்கள் தமிழர்களுடன் இணைந்து வாழ்வதே விவேகமான செயல்"

(அலுவலக நிருபர்)

முஸ்லிம்கள் தனிமாகாணம் கேட்பதோ தமிழர்களைவிட்டு தனித்து வாழ்வதோ விவேகமற்றசெயல் என்று தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள இஸ்லாமிய அரசியல் முன்னணி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முன்னணியின் தலைவர் டாக்டர் எம். ஏ. எம் ஜலால்

(5ம் பக்கம் பார்க்க)

### வடமராட்சியிலிருந்து வெளியேறிய அகதிகளுக்கு இன்றுமுதல்

## இந்திய நிவாரணப் பொருள் விநியோகம்

[அலுவலக நிருபர்]

இராணுவ நடவடிக்கைகளினால் வடமராட்சிப்பகுதியிலிருந்து வெளியேறிய அகதிகளுக்கு இன்றுமுதல் இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிவாரணப்பொருள் விநியோக வேலைகள் உடனடியாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வடமராட்சிப் பகுதியிலிருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் யாழ். மாவட்டத்திலுள்ள எந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தஞ்சமடைந்திருந்தாலும் அவர்கள் உடனடியாக தாம் தஞ்சமடைந்திருக்கும் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு காரியாலயத்தில் தம்மைப் பதிவுசெய்துகொள்ள வேண்டும்.

இப்படிப்பதிவு செய்பவர்களுக்கு இந்திய நிவாரணப் பொருள வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு இந்திய நிவரரணப் பொருள்கள் வழங்குவது சம்பந்தமாக யாழ் செயலகத்தில் நேற்றுக்காலை நடாத்தப்பட்ட கூட்டமொன்றிலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சாவகச்சேரி, கரவெட்டி, கோப்பாய், சங்கானை, உடுவில் தெல்லிப்பழை, நல்லூர் உதவி அரசாங்க அதிபர்கள் சமூக சேவைப்பகுதிப் பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம் இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி திரு. சௌத்திரி உட்பட இலங்கை யாழ். செஞ்சிலுவைச்

(6-ம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி அகதிகள்

## தென்மராட்சியில் இன்றும் நாளையும் விசேட கூட்டங்கள்

யாழ்ப்பாணம், திங்கள் வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் நலன்களைக் கவனிக்கும் முகமாக 'வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம்' விடுத்த கோரிக்கையையடுத்து சாவகச்சேரி உதவி அரச அதிபர் இன்றும் நாளையும் விசேட கூட்டங்களை நடத்தவுள்ளார்.

இன்று காலை கொடிகாமம் ப.நோ சங்க மகாநாட்டு மண்டபத்தில் ஊச்சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோரின் நலன்

(5-ம் பக்கம் பார்க்க)

### காங்கேசன்துறை

## சீமெந்து தொழிற்சாலையை இயங்கவைக்க நடவடிக்கை

(அலுவலக நிருபர்)

காங்கேசன்துறைசீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயங்கச்செய்வதற்கான நடவடிக்கைகள் கொழும்பிலுள்ள சீமெந்துக் கூட்டுத்தாபன லங்கா சீமெந்து லிமிட்டெட் உயரதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், லங்கா சீமெந்து லிமிட்டெட் துறைமுகக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக லங்கா சீமெந்து லிமிட்டெட்பொது முகாமையாளர் திரு ஐயமானேயும் பொறியியலாளர் ஒருவரும் கொழும்பிலிருந்து விமான

[6ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சிங்கர் Zig Zag தையல் மெஷின் தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் விற்பனைக்குண்டு 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். சி-9763

நல்ல இன புறொய்லர்ஸ்,லவ் பேட்ஸ் முட்டை விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: அண்ணு பாம், மொஸ்க் லேன், இணுவில், யாழ்ப்பாணம். [எ 1910]

சகல விதமான திருமணப் பட்டுப் பிடவைகளுக்கும், றெடிமேட் ஆடைகளுக்கும், நம்பிக்கையான ஸ்தாபனம் கணேசன் ஸ்ரோர்ஸ், இல 11, கஸ்தூரியார் லேன். [கன்னு திட்டிக்கு அருகாமையில்] யாழ்ப்பாணம். ஏ-1904

நாஷனல் வீடியோ டெக் [300, 370, 7000, 2000, 7200] இற்குரிய IC கள், சகல மெக்கானிக்கல் உதிரிப்பாகங்கள், சகல அளவுள்ள ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back என்பன விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி [றெயில்வே கடவைக்கருகாமை], யாழ்ப்பாணம். சி-9796]

சகலவிதமான பாவித்த வீட்டுத் தளபாடங்கள் தேக்கு கட்டில், சோகேஸ், மெத்தைகள், அல்மாரி, தையல்மெஷின், கசற் றேடியோ, பித்தளைப் பொருள்கள், சாப்பாட்டு மேசை.Rice Cooker, ஹோல் செற், Office மேசை, Dressing Table சாதாரண மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். [சி-9764]

### SERVICE

For Photostat copying Service outdoor Photographs, Processing & Printing film roll. Hiring cars for all occassons Kivi Photo (Station Junction) Jaffna. C-9598

### ஆருவது ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீ தேவன் இரவீந்திரன்

மண்ணின் மடியில்: 8-9-1962

அண்ணல் அடியில்: 13-7-1981

அன்பும் பண்பும்
ஆற்றலும் அறிவும்
பொங்கும் அழகும்
பொலிந்த ரவீந்திரா
அன்பால் நினைந்து
ஆண்டாறு ஆக
உந்தன் பிரிவால்
உருகி நிற்கின்றோம்.
வாழிய நினைவே.

அப்பா, அம்மா, தம்பி, உறவினர், நண்பர்கள்.
36/1, செட்டித் தெரு, நல்லூர்.
(சி-9788)

### விற்பனைக்கு

28-07-87, செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு யாழ். கால்நடை வைத்தியர் காரியாலயத்தில் ஒருநாள் கோழிக்குஞ்சுகள்விநியோகிக்கப்படும். பெறவிரும்புவோர் அவ்வப் பகுதி கால்நடை வளர்ப்போர் சங்கக்கிளைகளிடமோ, யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க நிர்வாக உறுப்பினரிடமோ, யாழ் கால்நடை வளர்ப்போர் காரியாலயத்திலோ 20-7-87 க்குமுன்பு பணம் செலுத்தி பதிவுசெய்து கொள்ளவும். சி-9601

### தேவை

அனுபவம் உள்ள வானொலிப் பெட்டிகள் பழுது பார்க்கும் தொழில்நுட்ப வல்லுநர்கள் [Technicians] தேவை இவர்கள் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரைக்குள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். "ரெலிக் கோணர்", நவீன சந்தை. சாவகச்சேரி. (சி—9765)

தையல்வேலைக்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ருடோ காட்சியறை, [Rado Show-Room] 331, பிரதானவீதி,யாழ்ப்பாணம் [சி 9797]

### மணப்பந்தல்

வெளிநாட்டில் நிரந்தரமாகத் தொழில்புரியும் மணமகன்களை திருமணம்செய்ய விரும்பும் மணப்பெண்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். 337, பலாலிவீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் [சி-9794]

### கல்வி

Graduate Teachers Training மூன்றுவருட பட்டதாரி ஆசிரியர் பயிற்சி [வெளிவாரி பல்கலைக்கழக சான்றிதழும் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழும் வழங்கப்படும்]. தகைமைகள்: க. பொ. த. [உயர்தாம்] 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலதிகவிபரங்களுக்கு காரியாலயத்துடன் 31-07-87 இற்கு முன் தொடர்பு கொள்ளவும் அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். சி-9769

### FOR SALE

36 Sri 6000 series Messey Ferguson Tractor & Trailer used for transport first owner for sale Can be seen at 639, Navalar Road, near Chetty Street Junction Jaffna. சி-9804

## ஆலயங்களைப் பார்வையிட்டனர்

பலாலி, ஞாயிறு.

குப்பிளான், ஏழாலை, குரும்பசிட்டி ஆகிய பகுதிகளை இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இராணுவத்தினரால் குண்டு வத்தும், ஷெல் அடித்தும், நாசமாக்கப்பட்ட ஆலயங்கள் வீடுகளையும் நேரில் பார்வையிட்டனர்.

ஒவ்வொரு மக்களையும் தனிமையில் சந்தித்துக் குறைகளைக் கேட்டு அறிந்தனர்.

இப்பகுதி மக்களுக்கான நிவாரணப் பொருட்களையும் வழங்கிச் சென்றனர்.

## வடமராட்சியில் ஆறு கொத்தணிப் பாடசாலை அமைப்புகள்செயல்படவில்லை

[அச்சுவேலி நிருபர்]

நெல்லியடி கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் செயற்படும் எட்டுக் கொத்தணிப் பாடசாலை அமைப்பில் ஆறு கொத்தணிப் பாடசாலை அமைப்புக்கள் செயற்படாமல் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளன

நெல்லியடிக் கோட்டக்கல்வி அலுவலகத்தின் கீழ் உடுப்பிட்டி, பருத்தித்துறைக் கல்வி வட்டாரங்களைச் சேர்ந்த 8 கொத்தணிப் பாடசாலை அமைப்புக்கள் உள்ளன.

மேமாதம் 26-ம் திகதி ஆரம்பமாகிய இராணுவ நடவடிக்கைகளினுல் ஆறு கொத்தணிப் பாடசாலை அமைப்புக்கள் செயற்படமுடியாமல் ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளன.

உடுத்துறைக் கொத்தணிப் பாடசாலை அமைப்பும், நாகர் கோவில் கொத்தணிப் பாடசாலை அமைப்பும் மட்டுமே ஓரளவு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த இரண்டு கொத்தணி அமைப்பும் செயற்பட்டபோதிலும் இங்கேயும் பாடசாலைக்கு வரும் மாணவர் விகிதம் மிகக் குறைவாக இருப்பதாசக்கூறப்படுகிறது.

## வாக்காளர் இடாப்பு வேலைகள்

[புங்குடுதீவு நிருபர்]

புங்குடுதீவு மத்தி கிராம சேவை அலுவலர் பிரிவிலுள்ள சகல வட்டாரங்களிலும் 1987-ம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு வேலைகள் தற்பொழுது மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

### 45-ம் நாள் நினைவஞ்சலி



இராஜகோபால் இராஜ்மோகன்
(திக்கம்,அல்வாய் மேற்கு)

மலர்வு: 7-3-68
உதிர்வு: 30-5-87

சொந்த மண்ணில்
வெந்து மடியும்
பைந்தமிழ் இனத்தின்
ஒருவனுகி
விந்தைகள் பலவும்
கற்றுத் தேர்ந்து
இந்த மண்ணில்
வாழாமல் சென்ருய்

அன்பினுல் அறிவினுல்
ஆற்றலினுல்
இன்பமாய் வாழும்
உனது திறமையால்
இன்றுள்ள மக்களின்
துயர் துடைத்திட
உன்மனதில் உறுதி
கொண்டாய்.

உறுதியான உழைப்பினுல்
உயர் கல்வி கற்று
மருத்துவபீடத்தில்
தெரிவாகி நின்ருய்
வருத்தமிகும் மக்களின்
நோய் தீர்ப்பதையே
பொருத்தமான
இலட்சியம்
எனக் கொண்டாய்.

ஈழத்தமிழரின்
உரிமைக்காக
உற்றதுணை நின்ருய்
வாழ விடவில்லை உன்னை
இராணுவத்தின்
வன்முறைகள்
மாழ வைத்ததோ இந்த
இராணுவப் படுகொலை
ஆழமான உன் நினைவை
என்றும் அழித்திடாது
அது.

உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
(சி- 9806)

## வடமராட்சியிலிந்து மக்கள் தொடர்ந்து வெளியேற்றம்

(அச்சுவேலி நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள மினி இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்படுவதால் பொது மக்கள் தமது வீடுகளைவிட்டு தொடர்ந்தும் வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை இரவு வெளியேறத் தொடங்கிய வடமராட்சிப் பகுதி பொது மக்கள் தொடர்ந்தும் வெளியேறிய வண்ணம் உள்ளனர்.

வடமராட்சிப்பகுதியிலுள்ள பொலிகண்டி, வல்வெட்டித் துறை, கரவெட்டி, முள்ளி, மந்திகை, புலோலி, பருத்தித் துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள மினி இராணுவ முகாம்களிலும், இராணுவ முகாம்களில் இருந்தும் இரவு பகலாக பொதுமக்கள் குடியிருக்கும் பகுதியை நோக்கி ஷெல் அடிக்கப்படுகின்றது.

அத்துடன் தொடர்ச்சியான துப்பாக்கிப்பிரயோகமும் செய்யப்படுகிறது.

இதனுல் அச்சமடைந்த பொதுமக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

வல்வெட்டி, உடுப்பிட்டி, வதிரி, வல்வெட்டித்துறை, ஊறணி, பொலிகண்டி.நெல்லியடி, திக்கம், சரவெட்டி,இமையாணன், கரணவாய்,புலோலி ஆகிய கிராமங்களில் இருந்து பொதுமக்கள் முற்ருக வெளியேறியுள்ளனர்.

வல்லைப்பாலம் உடைக்கப்பட்டு இருப்பதால் வாகனங்களில் வரமுடியாமல் பலமைல்கள் கால்நடையாக நடந்து ஆண்களும், பெண்களும்,குழந்தைகளும் கையில் பொருட்களையும் கொண்டு வடமராட்சியை விட்டு வெளியேறிச் செல்கின்றனர்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பட்டப்பின் படிப்பிற்காகப் பதிவு செய்தல் 1987/ 88

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1987/ 88 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகட்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல், புவியியல், இந்துநாகரிகம், வரலாறு, தமிழ், மெய்யியல், கல்வியியல்.

அறிவுறுத்தல்களுடன் சேர்ந்த விண்ணப்பப்படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப் பீடாதிபதி அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப்படிவங்களைப் பெறவிரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 25/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம்பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர் தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 25 ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் 5 ரூபா 75 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டிய 38 x 25 ச.மீ அளவுடைய தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 7- 8- 87 இற்கு முன்பாக, கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 7- 8-87 இற்குப் பின்புவரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது

ந. நாகராஜா,
உதவிப் பதிவாளர்,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(எ-145)

### இழந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் தொடர்ந்து முன்னேருதவாறு விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதலை நடத்திவருகின்றனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து பாரந்தூக்கி, புல்டோசர் உட்பட அறுபது கனரக வாகனங்களில் தொண்டமானுறு ஊடாக வடமராட்சிக்குள் பிரவேசிக்க ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் முயன்று கொண்டிருப்பதுடன் பருத்தித்துறை கற்கோவளத்தில் கடல் கப்பல் மூலமும் ஹெலிகள்மூலம் ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் இறக்கிவிடப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடமராட்சிப் பகுதியை சுற்றிவளைத்து தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் முயற்சியில் இராணுவத்தினர் இறங்கியுள்ளனர்.

வடமராட்சியிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து நடத்தப்படும் ஷெல், பீரங்கித் தாக்குதலினுல் பொதுமக்கள் தரப்பில் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதுடன் பலர் காயமடைந்துள்ளனர்

முகாம்களிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் பிரதமர் பிரேமதாசாவின் வீட்டுத் திட்டமான இராசகிராமத்தில் விழுந்து வெடித்ததினுல் இங்குள்ள பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மகான் என்பவர் பலியானுர். லொறியொன்றும் தீப்பிடித்து எரிந்துள்ளது.

### மகளிர் கல்லூரி எரிந்தது

இதேவேளை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி நேற்று நண்பகலளவில் எரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கல்லூரியின் இரு பிரதான கட்டடங்கள் நேற்றிரவு வரை தீப்பிடித்து எரிந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. [ஒ-கு]

### மணிவாக்கு

வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக்கெடும்.

—குறள்

[துன்பம் உரன் இல்லாத மனத்தின் குற்றம்; துன்பத்தை விலக்கும் வழி அடுத்துச் செய்யவேண்டிய கருமத்தில் மனத்தைச் செலுத்துவதேயாகும்.]

## நமதுநோக்கு

# யாழ். ஆயரின் மகஜர் பாலைவனத்தில்ஒருபசுந்தரை

பாதிப்படைந்த தமிழ் மக்களுடன் மனிதாபிமான அரசியல் ரீதியில் ஏற்பட்டுள்ள நெருகக உணர்வை விவேகபூர்வமாகவும் தீரத்துடனும் கட்டி எழுப்ப இந்தியா முன்வரவேண்டும்.

இதுவே பல பொறுப்பற்ற கண்டனங்களுக்கு இலக்கான யாழ். மாவட்ட ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை இந்திய தூதரகஅதிகாரி திரு. பூரியிடம் சமர்ப்பித்த மகஜரின் சாராம்சம் ஆகும்.

பொறுப்பற்ற கண்டனம் என்பது இந்தமகஜர் இடம் பெற்ற எங்கள் நேற்றைய பிரசுரத்திலேயே இன்னொரு தென்னிலங்கை மதகுரு வண போல் கஸ்பஸ் குறிப்பிட்டது காணப்படுகிறது.

அல்லும் பகலும் மக்களுக்கு உழைக்கும்ஆன்மீகத் தலைவர் வன்செயல்களை என்றும் கண்டித்துவந்திருக்கிறார். ஆனல் அமைதிப் போராட்டம் தோல்வியடைந்த நிலையில், அன்பிற்கும் அடைக்கும்தாழ் உண்டென்று வள்ளுவத்தைப் பொய்யாக்கினது இலங்கை அரசு. இதற்கெதிராக எழுந்த இளைஞர் போராட்டதுக்கு அனுதாபம் காட்டுவதை யார் கண்டிக்கத் துணிவார்?

"ஒரு ஆயரோ குருவோ தம்மக்களோடு வாழ்ந்து இளைஞர்களது முன்னேற்றத்திற்காக உழைத்து அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் இன சங்கார நடவடிக்கைகளை எதிர்த்து, நீதிக்காகப் போராடுவதை குற்றம்சாட்டுவது நியாயமாகாது" என்கிறார் போல் கஸ்பஸ்.

இனசங்காரத்தின் இன்றைய நிலை, சூரபத்மன் மாமரமாக உருவெடுத்து சுப்பிரமணிய சுவாமியை வெருட்டும் நிலை. சூரபத்மன் இறுதியில் சங்காரம் செய்யப்பட்டான்;ஆனாலும் சுவாமியை அதிகம் கலக்கி விட்டான். இன்றையபோர் பொதுமக்கள் பொறுக்க முடியாத இன்னல்களை குவித்துவருவதை மிகத் தெளிவாகவும் திட்பமாகவும் பட்டியல்போட்டிருக்கிறார் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை.

யாழ்ப்பாணத்தில் உணவுப்பஞ்சம் இல்லை; எனவே இந்திய உணவுக்கப்பல்கள் நிறுத்தப் படவேண்டும் என்ற கூக்குரலை அமைச்சரவை எழுப்புகின்றது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, மட்டக்களப்பு, அம்பாறை திருமலை, வவனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களிலிருந்தும் பாதுகாப்பு உறைவிடம், உணவுதேடி மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இந்தமக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் நிவாரணமளிக்கவேண்டியிருப்பதால் இதற்கும் இந்திய உதவியை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் என்கிறார் யாழ் ஆயர்.

இந்திய உணவு உதவி, இலங்கை அரசின் 'யாழ்ப்பாணமுற்றுகைக்கு' பலத்த அடி.

கடந்த ஒரு மாதத்தில், 4000 தொன் அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் —இதுவரை இந்தியாவிலிருந்து வந்த உதவியிலும் இருமடங்கு மேலான - சிப்பம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் துரிதமாக வந்திறங்கியிருப்பது இந்திய அடியின் எதிரொலி

உடலுக்கு அளிக்கும் உணவு போன்ற இந்திய உதவி, மக்கள் உயிருக்கு இலங்கை இராணுவத்தின் அக்கிரமங்களுக்குத் தொடர்ந்து பலியாவதைத் தடுக்க இன்றியமையாது.

ஜனநாயக சமுதாயம் வஞ்சனை ஆட்சியால் வளர்ச்சயடையாது. துன்ப நிலையில் தேர்தல் போன்ற கோமாளித்தனமும் ஒருசிறு ஆறுதலே!

பல்கலைக்கழகங்கள் பிரச்சினை கிளப்பினால் அவற்றை மூடு; யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியால் தடை ஏற்பட்டால் அதனை மூடு; றெயில் நட்டம் அதிகரித்தால் அதனை மூடு; பஸ் போக்குவரத்தும் நட்டத்தில் ஓடினால் அதனைத் தனியார் கம்பனிக்குக் கொடு. இவ்வாறு மூடுவிழாவும் "பிறைவேற்றைசேஷன்" என்றும் மருந்து தெளிப்பதே அரசின் கடமையானல், இந்த நாடு இன்றைய அரசின் தனிப்பட்ட சொத்தா? அது ஒரு மக்கள் நிறுவனம். அதனைத் திறப்பட நடத்தமுடியாது போனல் ஆட்சி மாற்றம் அதற்குத் தகுந்த பரிகாரம்.

"உங்கள் யாழ்ப்பாணப் போர் எங்கு நிற்கிறது?" என்ற கிண்டலே பொறுப்பற்ற எதிர்க்கட்சிகள் இன்று இடும் கூச்சல். எடுத்த எடுப்பிலே வடக்கு வீதியில் ஆரம்பமான போர் அவ்விடத்திலேயே இருப்புக்கு வரவேண்டியிருக்கிறது. முதலாம், இரண்டாம் கட்டங்கள் தோன்று எழுவாயானல் 'மூன்றும் கட்டம் ஆரம்பம்' என்பதின் அர்த்தமென்ன?

இந்த மனிதாபிமானமற்ற போரை இளைஞர் இயக்கம் மட்டுப்படுத்தமுடியும். ஆனல் பொதுமக்கள் அழிவே இராணுவ நோக்கமானதால் இத்திட்டத்தின் முதுகை ஒடிக்க இந்திய அரசாங்கம் முன்வரவேண்டிய கடப்பாடு உண்டு.

ஆவேசப்படாத சமத்துவ புத்தியுடன் இதனைக் குறிப்பிடும் யாழ்.ஆயர்,இங்குவாழும் மக்களுக்கும், இங்கு வெளியாகும் பத்திரிகைகளுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகின்றார்.

வசாவிளான் பலாலியிலிருந்து

# இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

வசாவிளான், பலாலி, தெற்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் எவராவது இதுவரை நிவாரண உதவி பெருதிருந்தால் இப்பகுதி கிராமசேவையாளர் திரு. உலகநாதனுடன் தொடர்புகொள்ளுங்கள்.

வசாவிளான் தெற்கு ஞான வைரவர் சனசமூக நிலைய தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இந்திய உணவு நிவாரணப் பொருள்கள் பாதிக்கப்பட்ட வசாவிளான் பலாலி தெற்கு மக்களுக்கு விரைவில் வழங்க முயற்சிகள் நடைபெறுகின்றன. 3 4 முறை உணவு நிவாரணம் பெற்ற மற்றைய கிராமங்களுக்கே இந்திய உணவுப் பங்கீடும் முதலிடம் கொடுத்து வழங்கப்படுவதைச் சுட்டிக் காட்டி, இங்கு விரைவில் வழங்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன்அரசினரால்வழங்கப்படும் இரண்டாங்கட்ட உணவுப்பங்கீடும் உங்களுக்கு விரைவில் வழங்கப்பட உள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் பல கிராமங்களிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்து வசிப்பதால் பங்கீடு நடைபெறும் தினம், இடம் ஒழுங்குமுறைகள் என்பன முன்கூட்டியே உங்களுக்குப் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்படும்.

வசாவிளான் பகுதியை

# இந்திய அதிகாரிகள் பார்வையிடவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

"பாதிப்படைந்து ஒன்றரை வருடத்திற்கு மேல் மக்கள் போகமுடியாதவாறு தடுக்கப்பட்டு பாழடைந்திருக்கும் வசாவிளான் கிராமத்தை இந்திய அதிகாரிகளும் அரச அதிகாரிகளும் நேரில் சென்று பார்வையிடவேண்டும்."

வசாவிளான் தெற்கு ஞான வைரவர் சனசமூக நிலையத் தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பாதிப்படைந்து ஒன்றரை வருடங்களுக்கு மேல் அகதிகளாக வீடு, உடமைகள் விவசாயம் ஆகியவற்றை இழந்து பல கிராமங்களிலும் தஞ்சம் அடைந்துள்ள வயாவிளான் கிராமமக்களுக்கு அவர்களின் பரிதாபநிலையை உணர்ந்து தொடர்ந்து நிவாரண உதவி வழங்கப்படவேண்டும்.

கடற்றெழிலால் பாதிப்படைந்தவர்களுக்கு விசேட உணவுமுத்திரை வழங்கியது போல வடபகுதி தவிர்ந்த வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம் வழங்குவதுபோல வயாவிளான் கிராமத்தில் தங்கள் செய்பயிர்கள் அனைத்தையும்விட்டு வெளியேறிக் கஷ்டப்படும் விவசாயிகளுக்கு விசேட உணவுமுத்திரை வழங்கப்படவேண்டும.

யாழ். அரச அதிபர் வன். வடக்கு உதவி அரசாங்க அதிபர், புனர்வாழ்வுக்கழகம் பிரஜைகள்குழு, செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கும் இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

# வலிமேற்கிலுள்ள அகதிகளுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று வழங்கப்பட்டன.

சங்கானை கிராம நீதிமன்றக் கட்டிடம், கலாசார மண்டபம், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை கிழக்கு தவளை அரசினர் பாடசாலை ஆகிய இடங்களில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகள் குடும்பங்களுக்கு இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த உணவு பொருள்கள் வழங்கும் வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு. நாராயணன் கலந்துகொண்டு உணவுப்பொருள்கள் விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார். யாழ் செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி திரு. இ. விஜயரத்தினம் மற்றும் வலி மேற்கு பிரிவு கிராம சேவை அலுவலர்கள் ஆகியோரும் இதற்கு உதவியாக செயல்பட்டனர். சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உணவுப் பொருள்களை பொறுப்பேற்று விநியோகம் செய்தது.

## தரம் குறைந்த பாண்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை, நாரந்தனை, கரம்பொன் போன்ற பகுதிகளில் சில பேக்கறிகளிலிருந்து தரம் குறைந்த பாண் கடைகளுக்கு விநியோகிக்கப்படுகிறது.

பாணில் வண்டு, புழுக்கள் இருக்கிறபடியால் சாப்பிட முடியாமல் இருக்கின்றது என பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

சம்பந்தப்பட்டவர்கள்அதில் கவனமெடுத்து உரிய நடவடிக்கை எடுப்பதோடு தொடர்ந்து தரமுள்ள பாண் கிடைப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை எடுக்கவேண்டும் என்று பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## கல்வி பணிப்பாளர் ஆலோசனை

(அச்சுவேலி நிருபர்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரிக்கு யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் திடீர் விஜயம் செய்து பார்வையிட்டார்.

அங்குள்ள அகதிகள் தங்குவதற்கும் சில வசதிகளைசெய்து கொடுக்குமாறு கேட்டுக கொண்டதுடன், மாணவர்களின் வகுப்புக்கள் தடையின்றி நடைபெறுவதற்கு ஏற்பாடுசெய்யுமாறும் அதிபருக்கு ஆலோசனை வழங்கினர்.

# வலி வடக்கில் இந்திய நிவாரண உதவி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான இந்திய நிவாரண உதவிகள் வழங்குவதற்கு வலி வடக்குப் பிரஜைகள் குழு ஒன்றியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பின்வரும் பிரிவுகளிற்கு இந் நிவாரணம் வழங்கப்பட விருப்பதாக மேற்படி ஒன்றியச் செயலாளர் திரு. சி. சிவமகாராஜா அறிவித்துள்ளார்.

மயிலிட்டி தெற்கு, கட்டுவன் வயாவிளான் பலாலி தெற்கு, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை, பளை, வீமன்காமம், மாவிட்டபுரம், கிரிமலை, தெல்லிப்பழை வடமேற்கு, தெல்லிப்பழை தென்மேற்கு, மயிலிட்டிக்கரை, பலாலி வடக்கு.

இப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தங்கள் பிரஜைகள் குழுக்களைச்சந்திக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர் (மா)

## அனுமதிபெறச் சென்றவருக்கு அடி

பலாலி, ஞாயிறு

மாவிட்டபுரம் பகுதியில் நிலைகொண்டு நிற்கும் சென்றி இராணுவத்தினரால் தினமும் பொதுமக்கள் தாக்கப்பட்டு வருகின்றனர்.

தமது வீடுகளில் பொருள்கள் எடுக்க அனுமதி பெறச் செல்லும் பொதுமக்களே இவ்வாறு தாக்கப்பட்டு வருகின்றனர்.

பாக்கியநாதன் என்பவர் தனது வீட்டில் உள்ளபொருள்களை எடுக்க இராணுவத்தினரிடம் அனுமதி பெறச் சென்ற சமயமே அனுமதிக்குப் பதிலாக நையப்புடைத்து அனுப்பட்டுள்ளார்.

சில மக்களை காலை முதல் மாலை வரை படையினர் தம்முடன் நிற்கவைத்து விசாணையின் பின் திருப்பி அனுப்புகின்றார்களாம்.

தென் ஆபிரிக்காவில்

# பெரும்பான்மை மக்கள் ஆட்சி அமைக்கும் போராட்டம் தொடரும்

## தேசியகாங்கிரஸ் அறிவிப்பு

உலகச் செய்திகள்

லண்டன், ஜூலை. 12
தென்ஆபிரிக்காவில் பெரும்பான்மை மக்களின் ஆட்சியை இடம்பெறச் செய்வதற்கான போராட்டத்தைத் தாம் தொடர்ந்து நடத்தப்போவதாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உறுதி கூறியுள்ளது

தென்ஆபிரிக்கவெள்ளையரின் லிபரல்கட்சிக்கும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸுக்குமிடையே செனகலில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளையடுத்தே தேசிய காங்கிரஸ் மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

தென்ஆபிரிக்காவில் பெரும்பான்மை மக்களின் ஆட்சி ஏற்பட்டபின்னர் சிறுபான்மை வெள்ளையர்களின் கலாசாரம் பாதுகாக்கப்படுமென்றும் தேசிய காங்கிரஸ் உறுதிகூறியுள்ளது.

## விடுதலை வீரரின் ஓய்வூதியம் அதிகரிப்பு

பட்ன, ஜூலை. 12
பீகாரிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தொகையை 200 ரூபாவிலிருந்து 250 ஆக அதிகரிப்பதென மாநில அரசு தீர்மானித்துள்ளது.

இம்மாதம் 15ம் திகதி முதல் அமுலுக்குவர இருக்கும் புதிய திட்டத்தின்படி விடுதலைவீரர்களுக்கு அரசு போக்குவரத்து பஸ்களில் இலவசபிரயாணத்திற்கு அனுமதிப்பது என்றும் அரசு முடிவுசெய்துள்ளது.

## 1500பேருக்குமேல் வசிக்கும் கிராமங்களுக்கு பஸ்

சென்னை, ஜூலை. 12
தமிழகத்தில் 1500 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட சகல கிராமங்களுக்கும் பஸ்சேவைகளை நடத்துவதென்று தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

2 ஆண்டுக்குள் இக்கிராமங்களுக்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய தீவிரவாதிகளின் வன்செயல் எதிரொலி---

## 7 வடமாநிலங்களில் விசேட பயங்கரவாத எதிர்ப்பு பிரிவுகள்!

புதுடில்லி, ஜூலை. 12
சீக்கிய தீவிரவாதிகளின் தொடர்ச்சியான வன்செயல்களை அடுத்து வடஇந்தியாவின் ஏழு மாநிலங்களில் விசேட பயங்கரவாத எதிர்ப்புப்பிரிவுகள் உடனடியாக அமைக்கப்படவுள்ளன.

பயங்கரவாதத்திற்கு எதிராக விசேடபயிற்சிபெற்ற பணியாட்களினுல் நிர்வகிக்கப்படும் இப்பிரிவுகள் பஞ்சாப், ஹரியாணு, ஹிமாலயப்பிரதேசம், ஜம்மு - காஷ்மீர், உத்தரப்பிரதேசம் ராஜஸ்தான், மத்தியபிரதேசம் ஆகிய மாநிலங்களில் அமைக்கப்பட இருக்கின்றன. டில்லி, சண்டிகார் யூனியன் பிரதேசங்களும் இதற்குள் அடங்கும்.

சீக்கியதீவிரவாதிகளின்பயங்கர நடவடிக்கைகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து புதுடில்லியில் கூடிய இந்த மாநிலங்களைச் சேர்ந்த உயர்அதிகளின் கூட்டத்திலேயே மேற்சொன்ன விசேட பிரிவுகளை அமைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

## இந்திய ஜனத்தொகை 76 கோடி

நியுயோர்க், ஜூலை 12
இந்திய ஜனத்தொகை தற்போது 76 கோடி என ஐ நா. புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

உரிய குடும்பக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் இன்னும் 13ஆண்டுகளில் இந்திய ஜனத்தொகை 100 கோடியாக அதிகரித்துவிடும் என்றும் அந்த புள்ளி விபரம் தெரிவிக்கின்றது.

## 500-வது கோடி குழந்தை 'மார்ஜா'

பெல்கிரேட், ஜூலை. 12
உலகின் 500-வது கோடி குழந்தை யூகோஸ்லாவியாவில் பிறந்துள்ளது.

அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் நேற்று சனிக்கிழமை பிறந்த 16 குழந்தைகளில் திருமதி சான்ஜாகஸ்பர் என்ற இளம்பெண்ணுக்குப் பிறந்த ஆண்குழந்தையே 500 கோடியாவது குழந்தையாகும்.

வரலாற்றில் இடம்பெற்றுவிட்ட இக்குழந்தைக்கு 'மார்ஜா' எனப்பெயரிடப்பட்டுள்ளது.

மாவிட்டபுரத்தில்———

## மக்கள் வெளியேறிய வீடுகளில் இராணுவம்

பலாலி, ஞாயிறு
மாவிட்டபுரம் பகுதியில் இராணுவம் தமது பலத்தினை பலமடங்காக அதிகரித்துள்ளது.

முன்னர் இப்பகுதியில் மிகக் குறைந்த அளவான இராணுவத்தினரே இருந்தனர். தற்பொழுது இராணுவத்தினரால் நாசமாக்கப்படாத மக்களின் வீடுகள் முழுவதும் இராணுவமே நிலைகொண்டுள்ளது.

அத்துடன் உயரமான இடங்களில் அதிசக்தி வாய்ந்த ஆயுதங்களும் பொருத்தி வைத்திருப்பதாக அப்பகுதிக்குப் பொருள்கள் எடுக்கச் சென்று வரும் மக்கள் கூறுகிறுர்கள்.

## 8மைல் தூரம் சென்ற ஷெல்கள்

(பண்டத்தரிப்பு)
பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் ஏவப்பட்ட ஷெல்கள் மூன்று, எட்டு மைல்கள் தூரம் வந்து வடலியடைப்புக் கிராமத்தில் விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்தன. வடலியடைப்பில் மக்கள் வாழும் பகுதியில் இரு ஷெல்கள் வந்து விழுந்து வெடித்ததினுல் இரு வீடுகள் சேதமடைந்தன மற்றொரு ஷெல் வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு பக்கத்திலுள்ள மரவெள்ளித் தோட்டமொன்றில் விழுந்து வெடித்தது.

## வருடாந்த கூட்டம்

மாவிட்டபுரம், ஞாயிறு
இணுவில் மருதனுமடம் இராமநாதன் கல்லூரி அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 15ம் திகதி புதன் பிற்பகல் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி. ஞா. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை இணைச் செயலாளர்கள் திரு தி. சி. சண்முகலிங்கம், திருமதி கைலாசநாதன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கு------

## இப்போது செல்லமாட்டேன் எம். ஜி. ஆர். கூறுகிறுர்

சென்னை, ஜூலை 12
தமிழக அமைச்சரவையில் இன்னும் இரண்டு மாதங்களுக்குள் மாற்றம் செய்யப்படும் என தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

சென்னையில் இடம்பெற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் திரு. எம். ஜி. ஆர். மேலும் தெரிவித்ததாவது:

சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவேண்டிய அவசியம் எனக்கு இன்னமும் ஏற்படவில்லை வருடாந்தம்அமெரிக்காவில் சிகிச்சைபெறச் செல்லும் நான் அதுபற்றி இன்னமும் யோசிக்கவில்லை. அதுபற்றி பின்னர் முடிவுசெய்யப்படும்.

பத்தமேனி ராணுவநடவடிக்கை:

# 24 பேர் பலி; 25வீடுகள்சேதம்

## 17 ஆலயம், 5 பாடசாலை பூட்டப்பட்டன!

### பிரஜைகள் குழு அறிக்கை

(அச்சுவேலி நிருபர்)
பத்தமேனிக் கிராமசேவையாளர் பிரிவில் மட்டும் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினல் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 2பேர் காணுமல் போயுள்ளனர். நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

பத்தமேனி பிரஜைகள் குழு தனது பகுதியில் நடைபெற்ற பாதிப்புக்கள் சேதங்கள் பற்றி தயாரித்துள்ள அறிக்கையின் மூலம் சேதங்கள் பற்றிய விபரங்களை வெளியிட்டுள்ளது.

பத்தமேனி பிரஜைகள் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தமது கிராமசேவையாளர் பிரிவில் அண்மைக்காலஇராணுவ நடவடிக்கைகளினுல் 24 பேர் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் 2 பேர் காணுமல் போயுள்ளதாகவும் நூற்றுக்கணக்கானவர்கள் படுகாயப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

25க்கு மேற்பட்ட வீடுகள் உடைத்து சேதப்படுத்தப்பட்டதாகவும் 4வீடுகள் முற்ருகத் தகர்க்கப்பட்டதாகவும் 17ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டு பூசையின்றி பூட்டப்பட்டிருப்பதாகவும் 5 பாடசாலைகள் செயற்படாமல் மூடப்பட்டிருப்பதாகவும் நூறுக்கு மேற்பட்டவீடுகளின் கூரை சேதமடைந்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் பயிர்களுடன் சேதப்படுத்தப்பட்டிருப்பதுடன் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையை அடுத்து நூற்றுக்கணக்கான கால்நடைகள் கொல்லப்பட்டிருப்பதுடன் பலர்உடல் உளப் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்தமேனி பிரஜைகள் குழு இப் பகுதியில் நடைபெற்ற சேதம் தொடர்பான விபரங்களை பிரஜைகள் குழு தலைவர் திரு. என். இராஜேந்திரன் செயலாளர் திரு கே ஆறுமுகசாமி ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

## ஓய்வுபெறுகிறுர்

(பண்டத்தரிப்பு)
சுழிபுரம் சுகாதார பரிசோதகர் திரு. ஏ. ஜே நாகலிங்கம் இம்மாதம் 17ம்திகதி தொடக்கம் தமது 31 வருட அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுகிறுர்.

ஆஸ்திரேலிய தேர்தலில்

## 3வது தடவையும் பிரதமராகி சாதனை படைத்த 'ஹோக்'

சிட்னி, ஜூலை. 12
ஆஸ்திரேலியாவில் பிரதமமந்திரி ஒருவர் தொடர்ச்சியாக 3வது தடவையாகவும் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுஇதுவேமுதல்தடவையாகும்.

மீண்டும் ஆஸ்திரேலியப்பிரதமராக அமோக பெரும்பான்மைப்பலத்துடன் தெரிவு செய்யப்பட்ட திரு. பொப் ஹோக்கே மேற்சொன்ன சரித்திர வரலாற்றைப்படைத்துள்ளார்.

தமது புதிய அரசு முன்னைய பொருளாதாரக் கொள்கைகளையே தொடர்ந்தும்கடைப்பிடிக்குமென்றும் இதற்குப் பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் திரு. ஹோக் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## அஸாமில் தொடர்ந்து பேரழிவு

புதுடில்லி, ஜூலை. 12
அஸாமில் வெள்ள அழிவுகளைச் சமாளிக்க 13 கோடிய ரூபா தருமாறு அஸாம் மாநில அரசு மத்திய அரசைக்கேட்டுள்ளது.

பிரமபுத்ராவும் அதன் கிளை நதிகளும் தொடர்ந்து பெருக்கெடுத்து தொடர்ச்சியான பேரழிவுகளை ஏற்படுத்திவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தையல் பயிற்சி நிலையம்

புங்குடுதீவு, ஞாயிறு
படித்து விட்டு வேலையின்றி வீட்டிலிருக்கும் யுவதிகளின் நன்மை கருதி இறுப்பிட்டி ஐங்கரன் சன சமூக நிலையத்தினர் தையல் பயிற்சி நிலையமொன்றை புங்குடுதீவு மேற்கு ஆறும் வட்டாரத்தில் அமைத்துளளனர்.

இப் பயிற்சி வகுப்பில் சுமார் ஐம்பதிற்கும் அதிகமான யுவதிகள் பயிற்சி பெற்று வருகின்றுர்கள்.

# ஹெலி சூடு மக்கள் மத்தியில் பதற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பண்ணை மினி முகாம் பகுதியைச் சுற்றியுள்ள பற்றைகளைச் சுற்றி கடந்த வியாழனன்று வட்டமிட்ட ஹெலிகாப்டர் ஒன்று சுமார் அரைமணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

இதனால் மண்டைதீவுப்பகுதி மக்கள் மத்தியில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

# உடுவில் சிவஞானப் பிள்ளையார்

உடுவில், ஞாயிறு

உடுவில் கிராமத்தில் இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் ஒல்லாந்த மன்னர் ஆட்சிக்காலத்தில் உடையார் பதவி வகித்த சங்கரப்பிள்ளை முதலியார் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. உடுவில் ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலயமாகும்.

கொன்றை மர நிழலில் கோயில் கொண்டு அடியார்களுக்கெல்லாம் திருவருள் புரியும் இவ் விநாயகர் ஆலயம் ஆரம்பத்தில் மடாலயமாகவும், பின்னர் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப, வசந்த மண்டபங்கள், மடைப்பள்ளி, வாகனசாலை, கோபுர வாசல் 1ம் பிரகாரம் இரண்டாம் பிரகாரங்கள் என்னும் அங்கங்களுடன் வேதாகம சாஸ்திரங்களுக்கமைய கோவில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ பால சுப்பிரமணிய சுவாமி சிதம்பரேஸ்வரர் மங்களாம்பிகா சமேத வாஞ்சிலிங்கேஸ்வரர், நவநாயகர், ஞான வைரவசுவாமி முதலிய கடவுளர் இன்று இவ்வாலயத் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கின்றனர்.

ஆனி மாத பௌர்ணமி திதியை அந்தமாகக்கொண்ட தசதின மகோற்சவம் மார்கழி திருவாதிரையை அந்தமாகக் கொண்ட தசதின உற்சவம், திருக்கார்த்திகை, மாத சதுர்த்தி, சித்திரா பூரணை, நவராத்திரி, சிவராத்திரி என்னும் நைமித்திய வழிபாடுகள் இவ்வாலயத்தில் பக்தி சிரத்தையுடன் நடைபெறுகின்றன.

கோவில் ஆதீனகர்த்தாவான பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமி சர்மாவின் நிர்வாகத்தில் இயங்கும் இக் கோவிலின் மகோற்சவ விழா கடந்த துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகி சென்ற 9ம் திகதி ரதோற்சவத்துடனும் மறுநாள் தீர்த்தோற்சவத்துடனும் விழா நிறைவெய்தியது.

-சர்மா மாஸ்டர்.

கிளிநொச்சிப் பகுதியில்——

# கல்விநிலையில் சமீபகாலமாக முன்னேற்றம்

## பணிப்பாளர் மகிழ்ச்சி

(கிளிநொச்சி நிருபர்)

"மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்து வந்த கிளிநொச்சியின் கல்வி நிலை அண்மைக்காலமாக முன்னேற்றத்தை கண்டு வருகிறது. இதையிட்டு நான் மகிழ்ச்சியும் பெருமிதமுமடைகிறேன்" என்று கிளிநொச்சியின்புதிய கொத்தணி அதிபராக பதவி உயர்த்தப்பட்ட திரு. என். சோதிநாதனிற்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் உரையாற்றுகையில் கிளிநொச்சி கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி ஆசிரிய ஒன்றியத்தலைவரும் கலைஞருமான திரு. கனக மகேந்திரா தலைமையில் இவ் வைபவம் மத்திய கல்லூரி கலை அரங்கில் நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில்;- கல்வியில் களங்கம் ஏற்படுத்தக்கூடாது கல்வியை பாழடிப்பது எமது இனத்திற்கு செய்யும் துரோகமாகும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இம் மாவட்டங்களில் தாபானவர்கள் இருப்பின் அவர்களுக்குஉரிய சிபார்சுகளை வழங்க ஆவனசெய்வேன்.

பிரதி கொத்தணி அதிபர் வண சுமணசாரதேரோ.கல்வி அதிகாரி எம். சண்முகநாதன். உருத்திரபுரம் கொத்தணி அதிபர் பொன்.சபாபதி. ஆசிரியை திருமதி சிவானந்தசர்மா, ஆசிரியர் ம.சத்தியநாதன், புனித திரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ப .மார்க்கண்டு ஆகியோரும் உரையாற்றினார்கள்.

# அச்சுவேலி பாடசாலைகள் செயல்படுகின்றன

[அச்சுவேலி நிருபர்]

அச்சுவேலிப்பகுதி பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லத் தொடங்கியுள்ளனர்.

கடந்த மாதம் 6ம் திகதி இராணுவ முற்றுகையை அடுத்து அச்சுவேலிப்பகுதி மக்கள்முற்றாகஇடம்பெயர்ந்து வெளியிடங்களில் தங்கியிருந்தனர்.

இப்பொழுது பொதுமக்கள் கணிசமான அளவு தமது வீடுகளுக்கு திரும்பிக்கொண்டிருப்பதால் பிள்ளைகளும் பாடசாலைகளுக்கு செல்லத் தொடங்கியுள்ளனர்.

அச்சுவேலி மகா வித்தியாலயம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி புனித திரேஸா மகளிர் வித்தியாலயம் என்பனவற்றுக்கு குறிப்பிட்டளவு மாணவர்கள் மிகவும் அச்சமான சூழ் நிலையில் சென்று திரும்புகின்றனர்.

# புனருத்தாரண வேலைகளுக்கு நிதி

(சுழிபுரம்)

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரண வேலைகளுக்காக இது வரை பொது மக்களிடம் இருந்து சுமார் ஏழு இலட்சம் ரூபா திரட்டப்பட்டுள்ளது. கோவில் உள்வீதி சுற்று வேலைகள் முடிவடைந்துள்ளன. மிக விரைவாக கோவில் கும்பாபிஷேகத்தை நிறைவு செய்யும் காரியங்களை பரிபாலன சபையினர் செய்யவுள்ளனர்.

## அச்சுவேலியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாளரிடம் புகார்செய்துள்ளார்.

இதேவேளை அச்சுவேலிப் பகுதியில் தாழப்பறந்த இரு ஹெலிகொப்டர்கள் பொது மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி மோட்டார் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களில் பிரதாப் (வயது19), பாலு (18 வயது) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஒ-கு]

## புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் மீது தாம் நடத்திய தாக்குதலில் ஆறு ராணுவத்தினர் ஸ்தலத்திலே கொல்லப்பட்டதுடன் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்: 40 எம். எம். கிரனைட் பிஸ்டல் (எச். கே)1 ரி-56 ரக ரைபிள் 4, ஏ. கே. ரக ரவைகள் 500 ற்கு மேல், 40 எம். எம்: ஷெல்கள் 03

இதேவேளை வளலாய் இராணுவ முகாமிலிருந்துவெளியே வந்த இராணுவத்தினருடன் தாம் நடத்திய நேரடி மோதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் தமது தரப்பில் லெப்.குட்டிக்கண்ணு (ஹரிச்சந்திரன், மானிப்பாய்) வீர மரணமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இவருக்கு தமது வீரவணக்கத்தையும் புலிகள் செலுத்தினர்.(ஒ)

## முஸ்லிம்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தீன், செயலாளர் ஜனாப் எம். அலுஹருதீன் ஆகியோர் இனப்பிரச்னை தொடர்பாக போராளிகளுடன் பேச்சுநடத்த யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளனர்.

எமது நிருபரிடம் பேசுகையில் அவர்கள் கூறியதாவது;

முஸ்லீம்கள் தமிழர்களுடன் இணைந்து ஒற்றுமையாக வாழ்வதே விவேகமான செயல்

தமிழர்களுடைய அபிலாசைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதேசமயம் முஸ்லிம் மக்களும் தமிழர்களும்எதுவித பிரச்னையுமின்றி பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் வாழ்ந்துவருவதுபோல் வாழவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தங்கிநிற்கும் நாட்களில் விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச்சந்தித்து இனப்பிரச்னை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம்.

அவரைஇப்பொழுது சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் பிறிதொருதடவை யாழ் வந்து சந்திக்க முயற்சி செய்வோம். [ஒ]

# ஐ.தே. கட்சி செயற்குழு இன்று கூடுகிறது

[கொழும்பு]

வடக்கு - கிழக்குப் பகுதியில் இடைத்தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது,எவரெவரை அத்தொகுதிகளில் வேட்பாளராக நியமிப்பது போன்ற விடயங்களை ஆராயும் பொருட்டு இன்று ஐ தே. கட்சி செயற்குழு கூடவுள்ளதாகக் கட்சித் தலைவர் திரு. ஹர்ஷா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எனினும் இத்தேர்தலில் ஐ தே கட்சி வவனியா. மன்னார், திருமலை, பட்டிருப்புத் தொகுதிகளில் போட்டியிடலாமெனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [சி]

## முல்லை மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மித்த பகுதிகளிலும் கொண்டு வந்துஇறக்கப்பட்டு இத்தேடுதல் வேட்டை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கு உதவியாக ஹெலிகொப்டர்கள் வானத்தில்பறந்து துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொண்டன.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று அதிகாலை 6 மணிமுதல் 48 மணித்தியால ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஊரடங்கு உத்தரவு இருஹெலிகொப்டர்களிலிருந்து வீசப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## வடமராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி]

களை கவனிக்கும் கூட்டமும் நாளை காலை சாவகச்சேரி உதவி அரச அதிபர் பணிமனையில் கைதடி ப.நோ.கூ. சங்க எல்லைக்குள் வாழும் அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் கூட்டமும் நடைபெறவுள்ளது.

கிராம சேவையாளர்கள், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் பொதுமுகாமையாளர்கள்,வட்டாரக் கல்வி அதிகாரிகள்,கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள். செஞ்சிலுவைசங்க பிரதிநிதிகள் உட்பட பொதுச்சேவை ஸ்தாபன பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகோள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## கனடா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் அகதிகள் படகு எங்கிருந்து எவ்வளவுபேருடன் புறப்பட்டதென்று தெரிவிக்கப்படாதபோதும் கனடாவை நோக்கி இப்படகு விரைவதாக பிரிட்டன் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் நேற்றுத் தெரிவித்தது.

கனடாவல் துறைமுகநகர் உள்ள பல பகுதிகளைக் கடத்தல் கும்பல்கள் சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திவருவதை யடுத்துக் கனடா செல்லும் தமிழ் அகதிகள் விடயத்தில் பாதுகாப்புத் துறையினர் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனராம்.

பிரிட்டனிலிருந்து வெளியான இவ்வறிவிப்பை யடுத்து கனடாவில் பாதுகாப்புப்படையினருடன் அந்நாட்டுக் குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளும் இவ்விடயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார்கள். இப்பகுதியில் கடும் மூடுபனி சூழ்ந்துள்ளதால் இவ்விதமான படகெதனையும் தாம் இன்னமும் காணவில்லையெனப் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த வருடமும் 150க்கும் மேற்பட்ட அகதிகள் கனடா சென்று தஞ்சமடைந்ததுகுறிப்பிடத்தக்கது. [சி]

# கோழிகளுக்கு இலவச தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போடப்படவிருக்கிறது.

யாழ். கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் ஆதரவில் சுண்டுக்குளி 46, விதானை வீதி இல்லத்தில் கோழிகளுக்கு நோய்வராமல் இருப்பதற்கு எதிர்வரும் புதன்கிழமைகாலை 8 மணி தொடக்கம் 1 மணி வரையில் தடுப்பூசி போடப்படவிருக்கிறது. கோழிவளர்ப்பில் ஆர்வம் கொண்டவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# தகவல் தாருங்கள்

கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் இவ்விடத்தைச் சேர்ந்த கன்னிகா தவராசா, மதனிகா குலராசா, திரு. கே கந்தையா ஆகியோர் பற்றிய தகவலை அறிய விரும்புகின்றார். இவர்கள் இம் மாதம் 8ம் திகதி கரவெட்டியை விட்டு வெளியேறினர். இவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திரு. கே. தியாகராசா,
330, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★ ★

நல்லூரைச் சேர்ந்த ஆசிரியை நேசமணி நடராசா துன்னாலை வடக்கு மு. கதிர்மாமத்தம்பி பருத்தித்துறையைச் சேர்ந்த ஜி. நேசராசா குடும்பத்தினரைப் பற்றி தகவலறிய விரும்புகின்றார். பின்வரும் விலாசத்துடன் இவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

நேசமணி நடராசா,
13, குறுக்குத் தெரு,
நல்லூர்.

★ ★

சுண்டுக்குளியைச் சேர்ந்த திருமதி செல்வராஜா வளலாயைச் சேர்ந்த திரு. புத்திர சிகாமணி செல்வராஜா (வயது 58) என்பவருடன் தொடர்புகொள்ள விரும்புகிறார். இவர் கடந்த 3ம் திகதி ஆவரங்காலில் இருந்து வளலாய் தபாற்கந்தோருக்கு அருகாமையிலுள்ள தமது வீட்டைப் பார்வையிடச் சென்றபோது காணாமல் போனதாக அறியப்படுகிறது. இவர் பற்றிய தகவல்களை அறிந்தவர்கள். பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்

திருமதி சி.
செல்வராசா.
மே/பா, இ. புண்ணிய மூர்த்தி,
476, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டுக்குளி.

★ ★

சுண்டுக்குழியைச் சேர்ந்த திருமதி த குலசிங்கம்,திரு. செல்லையா குலசிங்கம் என்பவரைப் பற்றிய தகவலை அறிய விரும்புகின்றார். இவர் ...ம் திகதியன்று திரு. பு. செல்வராஜாவுடன் வளலாய் வீட்டுக்குச் செல்கையில் காணமல் போய்விட்டார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் பின்வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி த. குலசிங்கம்
மே/பா இ. புண்ணிய மூர்த்தி,
476. ஆஸ்பத்திரி வீதி,
சுண்டுக்குளி.


சித்திவிநாயகர் துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான பிரபவவருஷம் ஆனி மாதம் 31ம் நாள் 15-07-1987 புதன்கிழமை காலை 8-20 முதல் 10-04 மணிவரை வரும் சுபவேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன் திருநிறை செல்வன் **பவளகேசன்** அவர்களுக்கும் | எனது புத்திரி திருநிறை செல்வி **மனோன்மணி** அவர்களுக்கும் |

திருமணவிழா திருவருள் நலத்தினால் மணமகள் இல்லத்தில் (தாவடி) இனிது நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசமேதரராய் வருகைதந்து. மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)

இங்ஙனம் தங்கள் நல்வரை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி சி. தம்பித்துரை (மணமகனின் பெற்றோர்) நாவற்குழி. | திரு. திருமதி நா. அப்பாக்குட்டி (மணமகளின் பெற்றோர்] தாவடி. |

[சி 9791)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 13-7-87

# இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசு-தமிழ்க் குழுக்களுக்கிடையில் பேச்சு ஆரம்பிக்க இந்தியா முயற்சி

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணும் நோக்கமாக இலங்கை அரசையும் தமிழ்க் குழுக்களையும் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான முயற்சிகளை இந்திய அரசு மேற்கொண்டு வருவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியையும் காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவையும் தனித்தனியாகச் சந்தித்து இந்த நடவடிக்கை குறித்து கருத்துப் பரிமாறினரென அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டிச. 19ம் திகதிய யோசனைகளின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு இந்தியா விரும்புவதாகவும் ஆனால் இலங்கையரசு டிசம்பர் 19ம் திகதி யோசனையை அடிப்படையாகவைத்து தீர்வுகாண தயாராகவுள்ளதாகவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும் டிசம்பர் 19ம் திகதிய யோசனைகளுக்கு மேல் விட்டுக்கொடுக்கவோ அல்லது அதனை பேச்சுவார்த்தைக்கு ஓர் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளவோ அரசு தயாரில்லையெனவும் அவை தெரிவித்துள்ளன.

இந்த யோசனைகளை ஒரு முழுமையான வடிவில் தமிழ்க் குழுக்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு அரசு முயற்சிகள் மேற்கொண்டுவருவதாகக் கூறிய அவ்வட்டாரங்கள், விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய தமிழ்க் குழுக்கள் இதன் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பம் தெரிவித்துள்ளதாகவும் கூறின.

இதேவேளை இலங்கையரசு இனப்பிரச்னைத் தீர்வுக்குப் புதிய யோசனைகளுடன் முன்வருவதற்குத் தயாராகவுள்ளதெனக் கூறியுள்ள அமைச்சர் திரு அத்துலத்முதலி, விடுதலைப் புலிகள் எந்தவொரு யோசனையையும் இதுவரை முன்வைக்கவில்லையெனக் கூறினார். அத்துடன் இந்திய அரசுதான் எந்தவொரு யோசனையையும் முன்வைக்காது வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரு மாநிலமாக்குவதுபற்றிக் குறிப்பிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சியில் இரு இராணுவம் பலி

[கொழும்பு]

வடமராட்சியில் கடந்த 3 நாட்களாக போராளிகளுடன் ஏற்பட்ட மோதலில் இரு இராணுவத்தினர் மட்டும் கொல்லப்பட்டதாக அரசு அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது. [ஓ]

## இலங்கையரின் வயிற்றுக்குள் தங்கக்கட்டி

[சென்னை]

கொழும்பிலிருந்து திருச்சி வந்த விமானப்பயணி ஒருவரின் வயிற்றுக்குள்ளிருந்து சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான தங்கக் கட்டிகளை திருச்சி சுங்கத்துறை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

692 கிராம் தங்கக்கட்டிகளை இந்த நபர்வயிற்றுக்குள் மறைத்துக் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [சி]

## காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு கடந்த வியாழக்கிழமை விஜயம்செய்திருந்தனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக பலாலி இராணுவமுகாம் இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெரி சில்வாவையும் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்காவையும் திரு. ஜயமானே சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுவார்த்தையின் போது சுமுகமான சூழ்நிலை உருவாகும் பட்சத்தில் சீமெந்துத்தொழிற்சாலையைமீண்டும் இயங்கவைப்பதற்கு வசதிகள் செய்து தருவதாகவும் பாதுகாப்பளிப்பதாகவும் இராணுவ உயர்அதிகாரிகளினால் திரு ஜயமானேயிடம் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

காங்கேசன்துறைப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்ட சீமெந்துத் தொழிற்சாலைக் கட்டிடங்களையும் திரு. ஜயமானே பார்வையிட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன லங்கா சீமெந்துலிமிடெட் துறைமுகக் கூட்டுத்தாபனம் ஆகிய மூன்றுப் கடந்தபலமாதங்களாக இயங்காமையினால் அங்கு வேலை பார்க்கும் சுமார் 3500க்குப் அதிகமான ஊழியர்கள் தொழிலாளர்கள் வேலையற்றுள்ளனர்.

தொழிற்சாலையை ஆரம்பிப்பது சம்பந்தமான இப்பேச்சுவார்த்தையின்போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை உயரதிகாரிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

## லண்டனில் ரெனி – பிரேமா சந்திப்பு

[லண்டன்]

பிரதமர் திரு. ஆர். பிரேமதாச நாளை செவ்வாய்க்கிழமை பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர், வெளியுறவு அமைச்சர் திரு. ஜெவ்ரி ஹோவ் ஆகியோரைச்சந்தித்து பேச்சு நடத்த உள்ளார்.

திரு.பிரேமதாசா தற்போது லண்டனில் தங்கியிருக்கும் நிதி அமைச்சர் திரு. ரெனி டிமெல்லை சந்தித்து இலங்கை நிலவரம் குறித்து கலந்துரையாடினர்.

## மயிலிட்டிதெற்கு மக்களுக்கு

யாழ்ப்பாணம், திங்

இராணுவ நடவடிக்கைகளினால் தமது வீடுகளை விட்டு வெளியேறிய மயிலிட்டி தெற்கு மக்களுக்கு இன்று காலை இந்திய நிவாரணப் பொருள்கள் விநியோகம் செய்யப்படவுள்ளது.

தெல்லிப்பழைதுர்க்கை அம்மன் கோவிலுக்கருகாமையில் உள்ள தெல்லிப்பழை ப. நோ கூ. சங்கக்கிளை இலக்கம் ஒன்றில் விநியோகம் செய்யப்பட இருக்கும் இவ்வைபவத்தில் இந்திய இலங்கை, யாழ்.செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் தெல்லிப்பழைஉதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் சிவமகாராசா செல்வி மைதிலி சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். [வா]

## இந்திய நிவாரண

(1ம் பக்கத் தொடர்ச்சி]

சங்கப் பிரதிநிதிகள் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தலைவர் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

சுமார் ஒருலட்சத்து எழுபதினாயிரம் மக்களைக்கொண்ட வடமராட்சிப்பகுதியில் இன்று 20 வீதத்திற்கும் குறைவான மக்களே அங்கிருப்பதாகவும் மிகுதிப்பேர் அங்கிருந்து வெளியேறி தென்மராட்சி கோப்பாய், ஆவரங்கால் கோண்டாவில், இணுவில் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [வா]

## இந்திய ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறுகிறது

### முடிவுகள் வியாழன் மாலை

[புதுடில்லி]

இந்தியாவின் ஒன்பதாவது ஜனாதிபதிக்கான தேர்தல் இன்று நடைபெறுகிறது. புதுடில்லியிலும் 25 மாநிலங்களின் தலைநகரிலும் இதற்கான வாக்குப் பதிவு நடைபெறும் தேர்தல் முடிவு எதிர்வரும் வியாழக்கிழமை மாலை அறிவிக்கப்படும்.

இத்தேர்தலில் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி சார்பில் உபஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனும் [தமிழ்நாடு] எதிர்க்கட்சிகள் சார்பில் முன்னாள் நீதியரசர் திரு. வி. ஆர். கிருஷ்ண ஐயரும் [கேரளா] சுயேட்சையாக திரு. மிதிலேஷ்குமாரும் [பீகார்] போட்டியிடுகின்றனர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற, மேலவை உறுப்பினர்கள் மட்டும் இத்தேர்தலில் வாக்களிக்கமுடியும். இதன்படி இந்தியாவிலுள்ள 771 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 3,919 சட்டமன்ற உறுப்பினர்களும் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பர்.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்கு மதிப்பு 702 ஆகும். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குமதிப்புஅவ்வவ் மாநிலங்களின் மக்கள் தொகையின் அடிப்படையில் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் 5,41,242. சட்டமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் 5,44,9೦9. மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 10,89,751.

திரு. ஜானி ஸெயில்சிங்கின் பதவிக்காலம் இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடைகிறது. [சி]

## வடக்கு, கிழக்கு மாகாண இடைத்தேர்தலுக்கு கொழும்பில் நியமனப்பத்திரம் தாக்கலா?

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடைத்தேர்தல்களை நடத்தஉத்தேசித்திருக்கும் இலங்கை அரசாங்கம் அதற்கான நியமனப்பத்திரங்களைகொழும்பில் தாக்கல் செய்யும் வகையில் பாராளுமன்ற தேர்தல் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காராய்ந்து வருவதாகத் தெரியவருகிறது. அண்மையில் நடைபெற்ற அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்திலும் இதற்கான ஆலோசனைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

தற்போதைய பாராளுமன்ற தேர்தல்சட்டத்தின் பிரகாரம் ஒருதொகுதிக்கு நியமனப்பத்திரமும், கட்டுப்பணமும் அத்தொகுதி இருக்கும் மாவட்டத்திலேயே செலுத்தப்படவேண்டும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் நிலையையடுத்தே இம்மாற்றத்தை கொண்டுவரஅரசுமுயற்சிப்பதாகதெரிகிறது.

இதேவேளை வடக்கு. கிழக்கு மாகாணங்களில் கட்டுப் பணத்தை செலுத்தவோ அல்லது நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்ய ஒழுங்குகளை மேற்கொள்ளமுடியாத அரசு இவ்விடங்களில் பொதுமக்கள்வாக்களிப்பதற்கான ஒழுங்குகளை எவ்வாறு செய்யப்போகிறதென அரசியல்வட்டாரங்களிலிருந்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

வீமன்காமத்தில் நேற்றுமுன்தினம் மாங்காய் பிடுங்கிக் கொண்டிருக்கும்போது ராணுவத்தினரால் சுடப்பட்டு படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட உடுவிலைச் சேர்ந்த செல்லர் இரத்தினம் [ஓவியம்] என்பவர் நேற்று சத்திரசிகிச்சையின்பின் ஆஸ்பத்திரியில் மரணமானார். [கு]

## துன்னாலையில் படையினரின் சூட்டுக்கு இருவர் பலி

யாழ்ப்பாணம், திங்

துன்னாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இராணுவத்தினர் மேற்கொண்டதுப்பாக்கி பிரயோகத்திற்கு இலக்காகி இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

வடமராட்சி இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து கொடிகாமம் பாடசாலையில் தங்கியிருந்த இவர்கள் தாம் விட்டுச்சென்ற பொருள்களை எடுப்பதற்காகச் சென்ற சமயம் இராணுவத்தினர் ஒரு பனைஅடைப்பிற்குள் பதுங்கியிருந்து இவர்களைநோக்கி சுட்டபோது பலியாகினர்.

குட்டிதவராசா [25 வயது], வல்லி முருகன் [58 வயது], ஆகிய இருவருமே கொல்லப்பட்டவராவார்.

இவர்களது இறுதிக்கிரியைகள் கொடிகாமம் பாடசாலையில் நடத்தப்பட்டன.(கு)

## ஷெல் தாக்குதல் 9 பேர் காயம்

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியானஷெல் தாக்குதலில் 5 வயதுச் சிறுவன் உட்பட ஒன்பதுபேர் படுகாயமடைந்தனர், பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இத்தாகுதலின்போது படுகாயமடைந்த கந்தசாமி புஷ்பராசா [வயது 5], பொன்னுச்சாமி தனலஷ்மி [வயது 22] வேலும்மயிலும் மனோரமா [வயது 40], சின்னத்தம்பி லட்சுமியம்மா [வயது 55], க. வி. சின்னத்தம்பி [வயது 58] சின்னத்தம்பிசோமசுந்தரம் [வயது 47], பாலசுப்பிரமணியம்கந்தசாமி [32வயது] வேலும் மயிலும் நந்தகோபால் [வயது 40]. தேவசிகாமணி [வயது 55] ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [கு]

## தள்ளாடியில் இராணுவம் சுட்டு இருவர் பலி

யாழ்ப்பாணம், திங்கள்

மன்னார் தள்ளாடிப் பகுதியில் நேற்று ட்ராக்டர் ஒன்றில் சென்றவர்கள் மீதுராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்

இச்சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளதாவது:-

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து கவச வண்டிகளிலும் கால் நடையாகவும் ரோந்து சென்றபோது வெள்ளைக்கொடியுடன் ட்ராக்டர் ஒன்று சென்றுகொண்டிருப்பதைக் கண்ட படையினர் அதில் இருந்தவர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

இத்துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் தர்மலிங்கம்(55 வயது) மற்றும் ஒரு இ.போ.ச ஊழியர் ஆகிய இருவரும் ஸ்தலத்தில் பலியாகினர். மற்றும் இருவர் பெட்டிக்குள் படுத்திருந்து உயிர் தப்பினர். (கு)

## புதுவையில் புதிய விமானநிலையம்

[சென்னை]

புதுச்சேரிக்கு அருகிலுள்ள கிராமமொன்றில் சுமார் 70 லட்சம் ரூபா செலவில் புதிய விமான நிலையமொன்று விரைவில் நிறுவப்படவுள்ளது.

இதற்கான சகலவேலைகளும் அடுத்தஇரு மாதங்களில் ஆரம்பிக்கப்கப்படுமென்று புதுவை முதல்வர் ஜனாப் எம். ஓ. எச். பரூக் தெரிவித்துள்ளார். [சி]